# 21. களவியல்

(காதல் களவொழுக்கத்தினைக் கூறும் பகுதி)

## களவு ஒழுக்கத்தின் இயல்பு

1038. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே.

## அதற்குரிய காரணம் முதலியன

1039. ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றிஉயர்ந்த பாலது ஆணையின
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே.

## ஐயம்

1040. சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்டலான.

## அதனை நீக்கும் கருவிகள்

1041. வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப.

Scanned with CamScanner

இன்பமும் பொருளும் அறமும் என்று சொல்லப்பெற்ற, அன்போடு இணைந்த ஐந்து ஒழுக்கங்களைக் கூறும்போது, காமக்கூட்டம் என்பது தமிழ் மறையோர் தமிழகத்துக் கூறப்பெற்ற எட்டுவகை மணத்துள், இசைத்துறையைச் சார்ந்த யாழ்த்துணையோர் இயல்பே. 1

ஒன்றுபடுத்தும் ஊழ்நிலையானும், வேறுபடுத்தும் ஊழ்நிலையானும், அமையும் வாழ்க்கையில் ஒன்று தலைச்செய்யும் உயர்ந்த ஊழின் ஆணையால், ஒத்த தலைவனும், தலைவியும் காண்பர். தலைவன் மிக்கோன் ஆனாலும் நீக்கப்படல் இல்லை. 2

தலைமகள் சிறந்திருந்தால், தலைவனுக்கு ஐயம் ஏற்படும், அது சிறந்தது என்று கூறுவர். இழிந்திருந்தால் இழிபே உள்ளத்தில் நிற்கும் என்பதால். 3

தேனைத் தேர்ந்துண்ணும் வண்டும், அணிகலன்களும், தொய்யில் கொடியும், வாடிய பூவும், மருட்சி விழியும், தடுமாற்றமும், கண்ணிமைத்தலும், அச்சம் போன்ற பிறவும் தலைவன் ஐயத்தைப் போக்கும் கருவிகளாகும் என்பர். 4

Scanned with CamScanner

## நோக்குதல்

1042. நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்.

## மெய்ப்பாடு நிகழ்தல்

1043. குறிப்பே குறித்தது கொள்ளுமாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்.

## ஆடவர் இயல்பு

1044. பெருமையும் உரனும் ஆடூஉ மேன.

## பெண்டிர் இயல்பு

1045. அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப.

## களவொழுக்க உணர்வுகள்

1046. வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்க்ம் சாக்காடு என்றுஅச்
சிறப்புடை மரபின் அவை களவு எனமொழிப.

Scanned with CamScanner

தலைமக்கள் இருவர் கண்களும், நாட்டத்தை வெளிப்படுத்தி, இருவரும் அறிவால் உடன்படுவதற்குத் துணையாய்ச் சேர்ந்து உரைக்கும் குறிப்புரையாக அமையும். 5

நாட்டங்கள் தாம் குறித்ததைக் கொண்டால், அடுத்து, களவிற்குரிய ஒழுகலாறுகள் நிகழும் என்று கூறுவர் அறிவுடையோர். 6

பெருமையும் வலிமையும் ஆடவர் இயல்பு. இது உலகம் முழுவதும் பொருந்தும். 7

அச்சம், நாணம், மடன் என்று முப்பண்புகளும் முந்தி நிற்பவை. எக்காலத்தும் பெண்டிர்க்கு உரியவை என்று கூறுவர். 8

1. குறையாத விருப்பம் 2. இடைவிடாது நினைத்தல் 3. இளைத்தல் 4. ஆவதற்குரியதைக் கூறல் 5. தம் நாண எல்லையைக் கடத்தல் 6. காண்பன அனைத்தும் தம்மைப் போன்றிருப்பதாகத் தோன்றுதல் 7. தம் செயல்களை மறத்தல் 8. தெளிவின்மை 9. சாதல் நினைவு, இவை களவுக்குரிய ஒழுகலாறுகளாக அமையும் என்று கூறுவர். 9

Scanned with CamScanner

## தலைமகன் இயல்பு

1047. முன்னிலை யாக்கல், சொல்வழிப்படுத்தல்,
நன்னயம் உரைத்தல், நகை நனி உறாஅது
அந்நிலை அறிதல், மெலிவு விளக்குறுத்தல்,
தன்னிலை உரைத்தல், தெளிவகப் படுத்தல்என்று
இன்னவை நிகழும் என்மனார் புலவர்.

## தலைவனுக்கு நிகழுங் கூற்று

1048. மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல்,
இடம்பெற்றுத் தழாஅல், இடையூறு கிளத்தல்,
நீடுநினைந்து இரங்கல், கூடுதல் உறுதல்,
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச்சிறப்பின் இருநான்கு கிளவியும்;
பெற்றவழி மகிழ்ச்சியும், பிரிந்தவழிக் கலங்கலும்,
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்;
குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்,
பெட்டவாயில் பெற்று இரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும்; தோழி
குறைஅவள் சார்த்தி மெய்யுறக் கூறலும்,

Scanned with CamScanner

1. தலைவியை முன்னிலைப்படுத்தல் 2. தன் சொல்வழிப்படுத்தல் 3. தான்விரும்பியதை எடுத்து இயம்புதல் 4. புன்னகைத் தோற்றத்தால் அவள்நிலை அறிதல் 5. தன்மெலிவை வெளிப்படுத்தல் 6. தன்னிலை உரைத்தல் 7. தெளிவைத்தன்கைப் படுத்தல் என்று இவை நிகழும் என்று கூறுவர் அறிவுடையோர். 10

1. தலைவன் தலைவியின் மெய்தொட்டுப் பழகல் 2. நலத்தினைப் பாராட்டல் 3. இடம்பெற்றுத் தழுவுதல் 4. அவள் நிலையால் ஏற்படும் இடையூற்றைச் சொல்லுதல் 5. இடையூற்றை மிகுதியாக நினைந்து இரங்குதல் 6. கூட்டத்திற்கு உள்ளம் பொருந்துதல் 7. இன்பநுகர்ச்சி பெறுதல் 8. தன் தீராத காதல் தன்மையைக் கூறல் ஆகிய எட்டும்; 9. மறுநாளும் பெற்ற வழி மகிழ்ச்சியும் 10. அவள் பிரிந்த வழிக் கலங்கலும் 11. நடந்தவற்றை நினைந்து பின் நிகழ்வனவற்றை உரைக்கும் போதும் 12. இவனைக் குற்றம் கூறிய பாங்கன் விரும்பினும் 13. விரும்பிய வாயிலாகிய தோழியை இரந்து வலியுறுத்தும் போதும் 14. ஊர், பேர் கேட்டு, தான் தொலைத்த மானைக்கண்டீரோ? போல் கேட்டுத் தன் தன்மையைச் சொல்லித் தோழியிடம் தன் குறையைத் தெரிவிக்கும் போதும். 15. தோழி,

Scanned with CamScanner

தண்டாது இரப்பினும் மற்றைய வழியும்,
சொல்லவள் சார்தலின் புல்லிய வகையினும்,
அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்
கேடும் பீடும் கூறலும், தோழி
நீக்கலினாகிய நிலைமையும் நோக்கி
மடன்மா கூறும் இடனுமார் உண்டே.

## இதுவும் அது

1049. பண்பிற் பெயர்ப்பினும், பரிவுற்று மெலியினும்,
அன்புற்று நகினும், அவள்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக்கியல்பே.

## பாங்கன் நிமித்தம்

1050. பாங்கன் நிமித்தம் பன்னிரண்டு என்ப.

## அவற்றுள் கைக்கிளை, பெருந்திணைகட்கு உரியவை

1051. முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே.
பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே.

## ஏனையவை

1052. முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே.

குறையுறுதல் தலைவியிடம் என்பதை மெய்யுறக் கூறலும் 16. நிறைவுற்று அமையாது இரத்தலும் 17. நெஞ்சோடு கிளத்தலும் 18. சொல் தலைவியைச் சார்தலின் புல்லிய நெஞ்சத்தனான போதும் 19. களவு நீட்டித்தலால், தோழி இவனைக் குறைகூறும் போதும் 20. தோழி இவன் குறையை நீக்காத வழியும் 21. மடலேறுவேன் என்று கூறலும் ஆகிய இருபத்தோரு இடங்களில் கூற்று அமையும். 11

1. தலைமகள் இளமைப் பண்பு கூறிப் பெயரும் போதும் 2. இரக்க உள்ளத்துடன் மெலியும் போதும் 3. அன்புற்றுச் சிரிக்கும்போதும் 4. அவள் பெற்று மகிழும் போதும் 5. வழிஇடைச் செல்லும்போதும் தலைவன் கூற்று நிகழும். 12

பாங்கனால் நிகழும் கூட்டம் பன்னிரண்டு வகை என்று கூறுவர். 13

எண்வகை மணத்துள் முதல் மூன்று கைக்கிளையின் பாற்படுவது; பின்னர் கூறிய நான்கு பெருந்திணைபாற் பாடுவது. 14

பாங்கன் நிமித்தம் பன்னிரண்டனுள் முதல் மூன்று கைக்கிளை; கடைநான்கு பெருந்திணை; இடை ஐந்து நிலம் பொழுதொடு பொருந்திய யாழோர் மேனவாயின ஐந்நிலம் பெறும். 15

Scanned with CamScanner

## தலைவிக்கு நிகழுங் கூற்று

1053. இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்,
காணா வகையில் பொழுதுநனி இகப்பினும்,
தான்அகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்
காட்சி ஆசையில் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும்,
புகாஅக்காலை புக்கு எதிர்பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்,
வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்,
தாளாண் எதிரும் பிரிவினானும்,
நாணுநெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும்,
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்
வரைவு உடன்படுதலும் ஆங்கதன் புறத்துப்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோள் மேன என்மனார் புலவர்.

## கூற்று நிகழும் இயல்பு

1054. காமத் திணையில் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள் வயினான.

1. பகற்குறி, இரவுக்குறி ஆகிய இருவகைக் குறி பிழையுற்ற காலையும் 2. காணாதபோது பொழுது மிகுதி கழியுமிடத்தும் 3. தான்வராது செல்லமாட்டான், வந்திருப்பான் எனக் கருதி அதற்குரிய அடையாளங்கள் உண்டா? எனப் பார்த்துச் செயலற்ற போதும் 4. அவன் தன் வீட்டில் புகுந்த போது அவனை விருந்தினனாகக் கருதிய போதும் 5. காலம் கருதி அவனை விருந்தினனாக ஏற்றுக்கொள்ள விரும்பும் போதும் 6. பொருள் முயற்சிக்காக ஏற்படும் பிரிவின் கண்ணும் 7. நாணம் உள்ளத்தை வருத்த அதனைக் கைவிடுதலைக் கருதிய இடத்தும் 8. மணம் செய்து கொள்ள வேண்டித் தோழி அவனிடம் கூறிய குற்றமற்ற சொற்களோடு, தன் இயல்பைக் கூறுமிடத்தும் 9. மணத்திற்கு உடன்பட்ட போதும் 10 அதற்கு எதிரிடையாகத் தமர், பிறருக்கு மணம் செய்ய நினைத்தபோது அதை மறுக்கும் போதும், தொகுத்துக் கூறினால் இவை தலைவிக்குரிய கூற்றுக்கள் எனக் கூறுவர் அறிவுடையோர். 16

களவொழுக்கத்தில் நாணும் மடனும் அவள் கண்ணின் வழி வெளிப்படுதலால், குறிப்பாலும், சூழ்நிலையாலும், உணர்த்துவாளே அன்றி நேரடியாகத் தன் விருப்பத்தைத் தெரிவிப்பது இல்லை. 17

Scanned with CamScanner

### நாணும் மடனும்

1055. காமம் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளஎன மொழிப.

### எதிர்ச்சொல் இல்லை

1056. சொல்எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்
அல்ல கூற்றுமொழி அவள் வயினான.

### மேலும் தலைவிக்கு நிகழும் கூற்று

1057. மறைந்து அவன் காண்டல், தன் காட்டுறுதல்,
நிறைந்த காதலில் சொல் எதிர் மழுங்கல்,
வழிபாடு மறுத்தல், மறுத்து எதிர்கோடல்,
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்,
கைப்பட்டுக் கலங்கினும், நாணுமிக வரினும்
இட்டுப்பிரிவு இரங்கினும், அருமை செய்து
அயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும், விட்டு உயிர்த்து
அழுங்கினும்,
நொந்து தெளிவு ஒழிப்பினும், அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும், பெற்றவழி மலியினும்
வரும் தொழிற்கு அருமைவாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித்தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும், உயிர்செல

Scanned with CamScanner

காதல் உணர்வை வெளிப்படுத்தாத கண்கள் இல்லாததால், பெருமை பொருந்திய நாணமும் மடனும் ஆகிய இரண்டும் உள்ளன என்று கூறுவர் 18

தலைவி தலைவனுக்கு எதிராகப் பெரும்பாலும் எதிர் உரை இல்லாததால், அல்ல கூற்றாகக் குறிப்பால் உணர்த்துவதே அவளிடம் உண்டு. 19

1. தான் மறைந்து நின்று தலைவனைக் காணல் 2. தன்னை அவனுக்குக் காட்டல் 3. நிறைந்த காதலில் தலைவன் பேசும் போது தான் பேச இயலாது நிற்றல் 4. அவன் தன்னை இரத்தலை மறுத்தல் 5. மறுத்த பின்பு அவனை ஏற்றுக் கொள்ளல் 6. குற்றமற்ற புன்னகையைச் சிறிது தோற்றுவித்தல். 7. அவன் கைபடலால் தான் கலங்குதல் 8. அதனால் ஏற்பட்ட நாணம் மிக்க வரும் போதும் 9. காரணங்களைக் கூறிப்பிரியும் போது வருந்துதல் 10. அருமை செய்து தவிர்த்தல் 11. வந்தவழிக் கூட்டத்தை இகழ்தல் 12. நெட்டு உயிர்த்து வருந்துதல் 13. தலைவன் தெளிவித்த தெளிவு நீங்குமிடத்தும் 14. அச்சம் மிக்க இடத்தும் 15. பிரிந்த இடத்தும் கலங்கல் 16. பெற்ற வழி மகிழ்தல் 17. வரும் தொழிற்குரிய துன்பங்களை வாயிலாகிய தோழி கூறும் போதும் 18. தோழி, தான் கூறியதை ஏற்றுக் கொள்ளாத போதும் 19. வீட்டில் சிறைவைத்தபோது தோழிக்கு வரைவு விருப்பத்தைக்

Scanned with CamScanner

## இதுவும் அது

1058. வரைவு இடைவைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரை எனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே.

## கூற்றிலும் நாணும் கற்பும் கடவாமை

1059. உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர் தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே.

## தோழிக்கு நிகழும் கூற்று

1060. நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியு
செய்வினை மறைப்பினும் செலவினும்
பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடுள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையா
பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்,
குறையுறக்கு எதிரிய கிழவனை மறையுற
பெருமையிற் பெயர்ப்பினும் உலகு உரைத்
ஒழிப்பினு

1. மணம் காலஇடைவெளி காரணமாக நீட்டிக்கும் போது வருந்தினும் 2. மணம் ஆவதற்கு முன்பு வந்தோன் துன்பப்படும் போதும் 3. தோழியிடம் நடந்ததைக் கூறி உரைப்பாயாக எனக் கூறும் போதும் தானே கூறும் காலம் உளவாகும். 21

உயிரினும் சிறந்தது நாண்; நாணத்தைக் காட்டிலும், குற்றம் தவிர்ந்த மெய்யுணர்வாகிய கற்புச் சிறந்தது; எனத் தொன்மை மூதறிஞர் சொன்ன மொழியைப் பொருந்திய உள்ளத்தால் தலைவன் இடத்திற்குச் செல்லும் போதும், வருத்தம் இல்லாத நற்சொற்களைத் தலைவி பிறரிடம் சொல்லும் போதும் அவை களவுப் பொருளாகும். 22

1. தலைவியின் மேல் நறுமணம் விரவிக்கமழும் மணமும், தோற்றத்தில் மாற்றமும், ஒழுக்க வேறுபாடும், உண்டி சுருக்கலும், செயல் மாற்றங்களும், செய்வினைகளை மறைத்தலும், தனியே செல்லலும், தனியே துயில்தலும், மேற்கூறிய உணர்ச்சி ஏழும் உணர்ந்தபின், தோழி, உண்மையானும் பொய்யானும் பல பொருள்கள் பற்றிப் பேசி அவள் உண்மை நிலை அறியும் விருப்பத்தானும் 2. தோழியிடம் தன் குறைகளைக் கூற முயன்ற தலைவனை, தெரியாதாள் போல் மாற்ற முயல்தலும்,

தொ. 27.

Scanned with CamScanner

3. உலக வழக்கப்படி தலைவியை மணம் செய்து கொள்க என்று கூறும் போதும் 4. என்னால் இயலாது அகலமுயலும் போதும் 5. தலைவியிடமே நேரே அறிவித்துப் பின் என்னிடம் வா என்றலும் 6. தலைவிக்குப் பேதைமையை ஏற்றிக் கூறலும் 7. முன்போல் முயல்க என உரைத்தலும் 8. அஞ்சி அச்சுறுத்தலும் 9. வந்த தலைவனைப் பொய்கூறிப் பொறுத்த காரணத்தை அறிந்த இடத்தும் 10. தலைவி, தலைவன் இணைந்த பின்பு அவனிடம் வணங்கிப் பேசலும் 11. தலைவன் குறையைத் தலைவியிடம் கூறும் போதும் 12. மறைத்த தலைவியின் முதல் மூன்று கூட்டங்களையுணர்ந்து பின் நிகழும் நிகழ்ச்சிகளின் போதும் 13. தலைவி உடன்பட்டதைத் தலைவனிடம் கூறும் போதும் 14. பலரும் அறிந்தால் நகைப்பிற்கு இடமாகுமெனக் கூறும் போதும் 15. தலைவன் கூட்டத்தை வேண்டுமிடத்தும் 16. பிரிவு வேண்டினும் 17. தலைவி விருந்து புறந்தருதலை விரும்பிய இடத்தும் 18. கூடியதை அறிந்த தோழி அறியாதாள் போல் நின்ற மடச் சிறப்பினும் 19. தலைவியைப் பாதுகாத்துக் கொள்க எனக் கூறுமிடத்தும் 20. செங்கடு மொழியாள் தலைவன் குறையைக் கூறி, என்பு நெகப் பிரிந்தோளாகிய தலைவியின் வழிச்சென்று அன்பை வற்புறுத்தற் கண்ணும் 21. தலைவன் வரும் வழிக்கண் ஏற்படும் தீமையால் ஏற்படும் கலக்கத்தினும். 22. காவல் கடுமையானதால்

பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன் வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அனை நிலை வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செய்கை தாய்க்கு எதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள் விலங்குறினும் களம் பெறக்காட்டினும்
பிறன் வரைவு ஆயினும் அவன் வரைவு
மறுப்பினும்
முன்னிலை அறன் எனப்படுதல் என்று
இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவு உடன்பட்டோர் கடாவல் வேண்டினும்
ஆங்கு அதன் தன்மையின் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையும்
தாங்கு அரும் சிறப்பின் தோழி மேன.

## செவிலிக்கு நிகழும் கூற்று

1061. களவு அலராயினும், காமம் மெய்ப் படுப்பினும்,
அளவு மிகத் தோன்றினும், தலைப் பெய்து
காணினும்,
கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்,
ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்
காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்,

Scanned with CamScanner

செயலற்ற இடத்தும் 23. இடம் காலம் இவற்றைக் கூறாது விலக்கும் நிலையும் 24. தலைவனது நாடு, ஊர், இல் குடிப்பெருமை, பிறப்பு, சிறப்பு இவைகளை நோக்கி அவன் சொன்னதைக் கேட்டு வரைதல் வேண்டும் பொழுதும் 25. தாயரின் ஐயச் செய்கையை மாற்றி, உண்மையைக் கூறும் போதும் 26. அவள் காப்பு மிகுதியால் நிலையை ஆய்தல் 27. செவிலி அறிவரை வினவிய போதும் 28. பிறன் வரைவு ஆராயமுற்பட்ட இடத்தும் 29. தலைவன் வரைவினை இவள் தமர் மறுக்கும் போதும் 30. முன்னிலை, அறத்தொடு நிலை என்ற இரு வகையால் குற்றம் நீங்கிய சொல்லைத் தாயிடம் உணர்த்தும் போதும் 31. மணத்திற்கு உடன்பட்டபின் தலைவனை விரைவுபடுத்தக் கோரும் போதும் 32. தலைவியைக் காத்திருக்குமாறு வற்புறுத்துவது உளப்பட சிறப்புற வந்த முப்பத்திரண்டு வகையாக, தடுத்தற்கரிய சிறப்பினையுடைய தோழி கூற்றுக்கள் அமையும். 23

1. களவு வெளிப்பட்டபோதும் 2. களவொழுக்கம் தலைவியின் மெய்யின் வழி வெளியான போதும் 3. தலைவியின் பெண் தன்மை மிக்க போதும் 4. தலைவியைக் களத்துக்கண்ட போதும் 5. கட்டு, கழங்கு, வெறியாடல் போன்றவற்றால் செய்தி தெரிந்த போதும் 6. வெறியாடச் சென்ற போது தோழியால் இடையூறு நேர்ந்த இடத்தும் 7. தலைவி கனவில் அரற்றுதலை அறிந்த போதும் 8. தோழியை

தோழியை வினாவலும், தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்த பின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்,
பிரிவின் எச்சத்தும், மகள் நெஞ்சு வலிப்பினும்,
இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியோடு
அன்னவை பிறவும் செவிலி மேன.

### நற்றாய்க்கும் இக்கூற்று நிகழ்தல்

1062. தாய்க்கும் வரையார் உணர்வு உடம்படினே.

### நற்றாயும் செவிலியும் தலைவியின் இயல்பைத் துணிதல்

1063. கிழவோன் அறியா அறிவினள் இவள் என
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக்கிளவி அறிதலும் உரித்தே.

### அது துணிதலின் அருமை

1064. தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லைப்
பிறநீர் மாக்களின் இன்றிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப.

### தாமே தூதுவராதல்

1065. காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவர் ஆதலும் உரித்தே.

Scanned with CamScanner

வினவும் போதும் 9. தலைவியின் நன்மைக்காகத் தெய்வத்தை வாழ்த்துமிடத்தும் 10. உடன்போக்கு நிகழ்ந்த பின்பு தோழியோடு இணைந்து தலைவியின் கற்பின் ஆக்கத்திற்குத் துணை நிற்கும் போதும் 11. தலைவியைப் பிரிந்த காலத்தும் 12. மகள் நெஞ்சு திண்மையான போதும் 13. தலைவி, தலைவனின், குடிப்பெருமையினை நினைக்கும் போதும் இவை போன்ற பதின்மூன்று வகையாவன செவிலியின் கூற்று நிகழிடங்கள். 24

செவிலிக்கு உரித்தான கூற்றுக்கள் அனைத்தும் தாய்க்கும் வருதலை நீக்கார் உணர்வு உடம்படுவதால். 25

தலைவனை அறிகின்ற ஆற்றலிலள் தலைவி என, தாயர் இருவரும், குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோரிடம் கேட்டுத் தம் ஐயத்தினைப் போக்கித் தெளிவாக அறிதலும் உரித்து. 26

தனது விருப்பத்தைத் தலைவன் முன் கூறுகின்ற மரபு தலைவிக்கு இல்லை. கைக்கிளை, பெருந்திணைத் தலைவியர் தம் வேட்கையினைக் கூறுவர். அச்செயல் புதிய மட் கலத்துப் பெய்த நீர் போல் பொசிந்து காட்டுதல் போன்ற உணர்வையுடைத்து என்று கூறுவர். 27

களவுக் கூட்டம் தனிமையில் சிறப்புறுவதால் தலைவன், தலைவியர் தாமே ஒருவருக்கு ஒருவர் தூதுவராகலும் உரித்தே. 28

Scanned with CamScanner

## தலைவியே குறியிடம் கூறுதல்

1066. அவன் வரம்பு இறத்தல் அறம் தனக்கு இன்மையின்
களம் சுட்டு கிளவி கிழவியதாகும்
தான் செலற்கு உரிய வழி ஆகலான.

## தோழியும் களஞ்சுட்டலாம்

1067. தோழியின் முடியும் இடனுமாருண்டே.

## களவுக்கு நாள் வரையறை

1068. முந்நாள் அல்லது துணையின்று கழியாது
அந்நா ளகத்தும் அதுவரை வின்றே.

## அந்நிலையின் தலைவியின் இயல்பு

1069. பன்னூறு வகையினும் தன்வயின் வரூஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்
துணைச் சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
துணையோர் கருமம் ஆகலான.

## செவிலியின் இயல்பு

1070. ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவோள் செவிலியாகும்.

## தோழியின் இயல்பு

1071. தோழி தானே செவிலியது மகளே.

Scanned with CamScanner

தலைவனின் எல்லையைக் கடக்கும் நிலை தனக்கு இல்லாமையால், தலைவி, குறியிடம் சுட்டும் சொற்களைச் சொல்வாள். தான் செலற்குரிய இடமாகவும் அது அமைதலால். 29

தோழி குறியிடம் கூறுகின்ற இடங்களும் உண்டு. 30

தலைவி குறியிடம் கூறுதல் மூன்று நாட்கள் அமையும். அது தோழியின் துணையின்றி நிகழாது. அந்நாட்களுள்ளும் அச்செயல் நீக்கப்பெறாது. 31

பலநூறு வகையானும் தனது ஒழுகலாற்றான் வரும் நயப்பாட்டுப் பகுதிக்கண் நாட்டமுறுதலை விரும்புதலால், துணையைச் சுட்டுதல் கிழவியின் செயலாகும். துணையாவார் செயல்களாக அவை அமைதலால். 32

ஆராய்ந்து, உணர்ந்து, அரிய மறைப்பொருள்களை எல்லாம் குறிப்பால் அறிந்து கூறுபவள் செவிலியாதலால் தாய் என்று சிறப்பித்துக் கூறப்பெறுபவள் செவிலி ஆகும். 33

தோழி, செவிலியின் மகளாவாள். 34

1072. சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற்
பொலிமே.

## தோழியின் திறன்

1073. குறையுற உணர்தல், முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என
மதியுடம்படுத்தல் ஒரு மூவகைத்தே.

## தோழியின் முயற்சி

1074. அன்ன வகையான் உணர்ந்த பின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாள் என மொழிப

## வழிப்படுத்தல்

1075. முயற்சிக் காலத்து அதர்ப்பட நாடிப்
புணர்த்தல் ஆற்றலும் அவள் வயினான.

## பகற் குறியும் இரவுக் குறியும்

1076. குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியத் தோன்றும் ஆற்றது என்ப.

## இரவுக் குறிக்கு உரிய இடம்

1077. இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும் வழி அதுவே;
மனையகம் புகாக் காலை யான.

Scanned with CamScanner

தலைவியை ஆராய்தலும், தலைவிக்கு உறுதி துணையாக இருத்தலால் சிறப்புறுவாள். 35

தலைவன், குறையுற அதனால் செய்திகளைத் தான் உணர்தல், குறிப்பால் செய்திகளை உணர்தல், தலைவியும் தோழியும் இருவரும் இருக்கும் போது அவன் வருதலால் எல்லாம் உணர்தல், ஆகிய மதியுடம்படுதல் மூவகைத்தாகும். 36

அம் மூவகையால் தலைவன், தலைவியரை உணர்ந்த பின்பு தான், பின்னிலை முயற்சிகளை அவள் செய்ய முடியும் என்று கூறுவர். 37

தோழி, தன் முயற்சிக் காலத்து அதற்குரிய வழி வகைகளை நாடி இருவரையும் கூட்டுவிக்கும் ஆற்றலும் அவள் இடத்தில் அமையும். 38

குறி என்று கூறப்பெறுவது இரவுக்குறி, பகற்குறி என இருவகை. அது நன்கு அறியுமாறு சொல்லப்பெற்ற நெறியுடையது என்று கூறுவர். 39

இரவுக்குறி வீட்டின் அகப்பாட்டெல்லைக்குள்ளும், மனையகத் துள்ளோர் பேசும் சொற்கள் கேட்கும் புற எல்லைக்குள், மனையகத்திற்குள் புகுதற்கு ஆகாத காலத்தில் அமையும். 40

Scanned with CamScanner

## பகற்குறிக்கு உரிய இடம்

1078. பகற்புணர் களனே புறன் என மொழிப
அவள் அறிவுணர வருவழியான.

## அல்ல குறிப்படுதல்

1079. அல்ல குறிப்படுதலும் அவள்வயின் உரித்தே
அவன் குறி மயங்கிய அமைவொடு வரினே.

## தலைவி

1080. ஆங்காங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒரு சிறையான.

## தலைவன்

1081. மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை.

## இதுவும் அது

1082. ஆற்றினது அருமையும், அழிவும், அச்சமும்,
ஊறும் உளப்பட அதனோரன்ன.

## தந்தை முதலியோர்

1083. தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப.

## தாய்

1084. தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்.

Scanned with CamScanner

பகற்குறிக்குரிய இடம் வீட்டின் புறப்பகுதியாகும் என்று கூறுவர். அவள் அறிதற்குரிய இடமாகவும், அவன் வருதற்குரிய இடமாகவும் அமையும். 41

குறியல்லாத குறிப்படுதலும் தலைவிக்கண்ண உரித்து, அவன் செய்த குறியாக மயங்கிவரும் காலத்து. 42

ஏற்கனவே குறிக்கப் பெற்ற ஒழுகலாறுகள் போக, ஆங்கு, ஆங்கு ஒழுகும் ஒழுக்கம் உண்டு; அடக்கமான இடம் தானே வாய்த்துழி. 43

களவொழுக்கத்தின்கண், ஓரை, நாள் போன்றவற்றைப் பார்த்து, கூட்டத்தைத் துறக்கும் ஒழுக்கம் தலைவனுக்கு இல்லை. 44

வரும் வழியினது அருமைப்பாடும், காவல் மிகுதியால் உளதாகும் அச்சமும், விலங்குகளால் ஏற்படும் அழிவும், துன்பமும், பிறவும், துறந்த ஒழுக்கம் இல்லை. 45

தந்தை, தமையன் போன்றோர் குறிப்பால் தலைவியின் ஒழுகலாறுகளை உணர்வர். 46

தாய், தலைவியின் ஒழுகலாறுகளை அறிதல் செவிலி அறிந்து கொள்ளும் போது அறிவாள். 47

Scanned with CamScanner

## களவு வெளிப்படுதல்

1085. அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்
அங்கு அதன் முதல்வன் கிழவனாகும்.

## வரைதல்

1086. வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று
ஆயிரண்டென்ப வரைதல் ஆறே.

## வரைந்தல்லது பிரியாமை

1087. வெளிப்படை தானே கற்பினோடு ஒப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக
வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை.

Scanned with CamScanner

ஊரார் பேசும் அம்பலும் பழிதூற்றும் அலரும் களவை வெளிப்படுத்தும். அதற்குக் காரணம் தலைவனின் போக்குவரத்து நிகழ்ச்சிகள். 48

புறத்தார்க்குத் தெரிந்த பின்பு மணந்து கொள்ளல், புறத்தார்க்குத் தெரியாது மணத்தல் என இருவகைப்படும், மணத்திற்குரிய வழிகள். 49

வெளிப்படையாக மணந்து கொள்ளுதல் கற்பினோடு ஒத்தாலும், முன்புக்கூறிய ஓதல், பகை, தூது என்ற முப்பிரிவுகள், வரையாது பிரிதல் தலைமகனுக்கு இல்லை. 50

Scanned with CamScanner

# 22. கற்பியல்

(கற்பு ஒழுக்கத்தை உணர்த்தும் பகுதி)

## கற்பு மணம்

1088. கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே.

## கொடுப்போரின்றியும் வதுவை உண்டு

1089. கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன்போகிய காலையான.

## மேலோர் – கீழோர்

1090. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே.

## கரணம் தோன்றக் காரணம்

1091. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.

## தலைமகன் கூற்று

1092. கரணத்தின் அமைந்து முடிந்தகாலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்சவந்த உரிமைக் கண்ணும்

Scanned with CamScanner

கற்ப என்று கூறப்பெறுவது, வதுவைச் சடங்குடன் பொருந்திக் கொள்ளுவதற்குரிய மரபினையுடைய தலைவன், தலைவியைக் கொடுப்பதற்குரிய மரபினையுடையோர் கொடுப்பக் கொள்வது. 1

கொடுப்போரின்றியும் மணம் உண்டு. களவொழுக்கத்தில் இணைந்து உடன்போகிய காலத்து. 2

சேர, சோழ, பாண்டியர், என்ற பேரரசர் மூவர்க்கும் உரிய வதுவைச் சடங்குகள், பின்பு மக்களுக்கும் ஆகிய காலமும் உண்டு. 3

சமுதாயத்தில் பொய் கூறலும், பிழைபட நடத்தலும் தோன்றிய பின்னர், தலைவர் ஏற்படுத்தினர் வதுவை என்று கூறுவர். 4

1. மணம் நிறைவேறிய காரணத்தால் இருவரும் நெஞ்சு கட்டவிழ்ந்து மலர்ந்து கூடிய கூட்டத்தின் கண்ணும் 2. தன் உள்ளத்து நீங்காத மகிழ்ச்சி மிகுந்து தோன்றும் காலத்தும் 3. அஞ்சும் வண்ணம் தலைமகளிடத்து வந்த உரிமைக் கண்ணும் 4. நல்நெறியாகி

தொ.28.

இல்லறம் தொடரும் தொல்நலப் பொருளின் கண்ணும் 5. மணம் செய்து கொண்ட பெருமையால், களவியலில் நடந்த குற்றப் பொருண்மைகளை எடுத்துக் கூறும் போதும் 6. களவில் அஞ்சிய காலத்து, தோழி கூறிய பெருமை பெறும் கடவுளை ஏத்திய இடத்தும் 7. துன்பம் தீர ஆர்வத்தோடு கலந்து சொல்கின்ற பொருள்களிலும் 8. நீ எது செய்தாலும் தேவாமிர்தம் போல் சுவைக்கின்றது அதற்குக் காரணம் சொல்என அடிசிலையும் பூவையும் தொடுக்கும் போதும் 9. அந்தணரிடத்தும் சான்றோரிடத்தும் பிறரிடத்தும் எவ்வாறு நடக்க வேண்டும் என்று குறிப்பிடும் போதும் 10. களவு ஒழுக்கம் நிகழ்ந்தபோது அரிய செயல்களைக் கூறி, சுழலும் உள்ளத்தொடு பேசிய இடத்தும் 11. ஆகாயத்தில் எழுதிய எழுத்துப் போன்று களவுக் காலத்து நடந்த குற்றங்கள் நீங்க ஒழுகும் போதும் 12. வருந்தாதே, அஞ்சாதே என்று களவுக்காலத்துக் கூறி, தலைவியிடம் குறித்த காலத்து வராத செய்திகளைக் கூறும் போதும் 13. பொறுமையும் பெருமையும் ஒரு வடிவம் பெற்றவள் போன்ற தலைவியிடம், பல நலம் சான்ற தோழியாகிய வாயில்வழிப் பொருந்தியதையும், தன்போன்ற புதல்வனைத் தந்த தகுதிகூறுமிடத்தும், 14. புதல்வனைப் பெற்று அணிமை நீங்கிய பொழுது அதற்குரிய நெய்யாடல் புரிந்த தலைவியை நோக்கி, அவள் தமையன்மாரும், ஏனையோரும் சேர்ந்து செய்த பெருஞ்சிறப்பின் போதும் 15. இவனுடைய புறத்தொழுக்கம் காரணமாக ஊடல் கொண்டு கிடந்தவளைக் கால்களை வருடி ஊடல் நீக்க

முயன்ற போதும் 16. நெருங்க முடியாத அளவு ஊடல் மிகுத்தோளை, அவளுக்கு நெருங்கிய பெண்டிர் வழி ஊடலை நீக்க முயன்ற போதும் 17. பிரிவுக் காரணமாக வருந்திய இருவரை அவர் வருத்தத்தினை நீக்கிய இடத்தும் 18. மிகுந்த பிரிவின் அஞ்சிய வருத்தத்தின் கண்ணும் 19. சென்று மீண்டும் திரும்ப நினைத்த இடத்தும் 20. பொருளைவிட அன்பின் வலிமையை உணர்ந்த இடத்தும் 21. பிரிந்தவிடத்து அவள் அச்சம் கருதியும் 22. பிரியேன் என்று கூறிப்பிரிந்து பிழை செய்த இடத்தும் 23. உடன் கொண்டு செல்ல வேண்டும் என்றும் ஏனையவற்றைக் கூறிய தோழியிடத்தும் 24. வேற்றுநாட்டிற்குச் செல்லும் போது ஏற்படும் வருத்தத்தின் கண்ணும் 25. பாதியில் திரும்பிவிடலாமா? எனநினைத்த ஆய்வின் கண்ணும் 26. மீண்டுவந்த போது ஏற்பட்ட சிறப்பின் கண்ணும் 27. பெரும்புகழுடைய தேரைக் கொண்டு செலுத்தும் பாகரிடம் பேசும் போதும் 28. காமக் கிழத்தி, மனைவி ஆகியோர் பேசும்போது எதிர் கூறும் சொல்லின் கண்ணும் 29. சென்ற இடத்து ஏற்பட்ட துன்பத்தினை விளக்கித் தலைவியிடம் கூறும் போதும் 30. தொழில் முடித்து வந்து விருந்தினரொடு நல்லதை விரும்பிய இடத்தும் 31. தன்னை வரவேற்க மாலை ஏந்திவரும் மனைவியரும் சுற்றமும் செய்தவைகளை ஏற்கும் போதும் 32. பாணன் முதலியோர் கூற்றுக்கு எதிர் பேசும் போதும் 33. இவை போன்ற பிற இடத்தும் ஆகிய முப்பத்து மூன்றும் தலைவனுக்குரிய கூற்று நிகழும் இடங்களாம்.



Scanned with CamScanner

1. தலைவனது நினைவினை மிக நன்றாக அறியுமாதலின் அவனை ஏற்றுக் கொள்ளுமிடத்தும் 2. அணுகாதவாறு நீக்கி நிறுத்துமிடத்தும் 3. மனைவி உரிமை கொடுத்ததால் அவனுக்குப் பெருமை குறையாத நிலையில் செலுத்தும் அன்பின் கண்ணும் 4. தலைவனைத் தலைவி பிரிந்த தனிமை பெரிதாகலால் மனச்சுழற்சி பொருந்திய அன்பின் மிகுதிக் கண்ணும் 5. இன்பமும் துன்பமும் தன்பால் தோன்றுமிடத்தும் 6. புதல்வன் பிறந்தபோது நெய்யணி விழாவில் தலைவியை விரும்பிய தலைவனை நெஞ்சு புண்படுமாறு செய்து நெருக்கத்தை நீக்கிய இளிவருநிலையிலும் 7. விரும்பிய உள்ளத்தோடு புதுப்பெண்டிரைச் சார்ந்து அகன்ற தலைவனை, தனிமை மிகுதியை உணர்ந்து நெஞ்சத்தை உறுதிப்படுத்திக்கொண்டு அவனை எதிர்பெய்த்து கூட மறுத்த அன்பின்காலத்தும் 8. புறஒழுக்கத்தில் தங்கிய தலைவனை நீ உன் அன்பை என் தங்கையராகிய பரத்தையர்க்குக் கூறுக என இரந்து வேண்டுதற்கண்ணும் 9. அவரிடம் செல்லாத காலத்தும் செல்க என விடுத்தல் கண்ணும் 10. காமக்கிழத்தி, தன் குழந்தையைத் தழுவி விளையாடிய காலத்தும் 11. அவ்விடத்தே தோன்றிய தலைவன் இல்லறம் புரியும் எண்ணத்துடன் அவளிடம் ஊடலைப் போக்க விரும்பிய இடத்தும் 12. தந்தையைப் போன்றவன் மகன் என மகனைப்

பழித்துக் கூறுவது போன்று கூறும் போதும் 13. கொடுமையுடையோர் கொடுமை அவரையே பின்னர் சுடும் என்ற பழமொழியை மனத்துட் கொண்டு, தலைவனது புகழை விரும்புவரோடும் சேர்ந்து, நின்ற தகுதிக் கண்ணும் 14. தனது கொடிய ஒழுக்கத்தைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும் எனத் தலைவி காலில் தலைவன் வீழ்ந்த போது, உம்முடன் காதலுடைய எம் தங்கையர் இதைக் காணின் நன்று எனக்கூறும் போதும் 15. தன் புதல்வனுக்கு அணிகலன்களை அணிந்து அனுப்பிய பரத்தையரை நினைத்தபோதும் 16. தன்னிடமுள்ள அன்பின் சிறப்பையும், அவனிடமுள்ள பிரிவின் நிலையையும் நினைந்து, முன்பு அவன் சூள் உரைத்ததை எடுத்த போதும் 17. அவன் காமக்கிழத்தியர் நலம் கூறித் தன்னை அயன்மை செய்யும் நிலையை முடிக்கும் போதும் 18. தலைவனின் புறத்தொழுக்கத்தின்கண் தோழி கூறியவற்றை எல்லாம் கேட்டுத் தன் கற்பினின்றும் திரியாது, சினந்தும், மகிழ்ந்தும், பிரிந்தும், விரும்பியும், இவ்வாறு வரும் பல்வேறு வகையில் வாயிலாகிய தோழியின் வழிவரும் கூற்றுக்களுடன் தொகுத்துத் தலைவியின் கூற்றுக்கள் அமையும் என்க. 6

உடன்போக்கில் தலைவி சென்றபோது, இடை வழியில் கருப்பொருள்களையும் அதன் செயல் களையும் காட்டிய தலைவனுடன் தற்போது மனை இருந்து இல்லறம் நடத்தும் போது, தலைவன் செயலுக்கு அஞ்சுகின்ற அச்சம் அவளிடம் இருக்கும். 7

தலைவன் பிரிந்து சென்ற போது தோழியுள்ளிட்ட வாயில்களைத் தலைவனிடம் தூதாகப் போகவிட்ட காலத்தும் அவன் செய்யும் வினைக்கண் அச்சம் நிகழும் என்று அறிவுடையோர் கூறுவர். 8

1. பெறுவதற்கு அரிய பெரும் பொருளாகிய திருமணம் முடிந்த பின்பு வந்த தெளிவுபடுத்த வேண்டிய மரபின் சிறப்பின் கண்ணும் 2. களவுக் காலத்து தாம் உற்ற இடையூறுகளை நீக்கிய திறத்தைச் சொல்லும் போதும் 3. சோர்வு இல்லாத தலைவி, சுட்டிய தெய்வத்தைப் பரவுதல் வேண்டிய இடத்தும் 4. புகழுடைய பெரும்பொருளாகிய இல்லறத்தில், தலைவுன் சிலவற்றை மறந்த போதும் 5. புறத்தொழுக்கம் உடைய கணவனை, தலைவி மனம் வருந்திக் கூறிய போது அவளை ஊடல் போக்க வேண்டிய இடத்தும் 6. பரத்தையர் வழிச் சென்று தவறிச் சென்று வந்த கணவனை நெருங்கி, தலைவியைச் சரிப்படுத்தி அவள் அன்பிற்குரியவனாக ஆக்கிக் கொடுத்தற் கண்ணும், 7. பணிவால் தலைவனை வணங்கும் போதும் 8. பரத்தைப் பிரிவு விளையாட்டில் விரும்பிய அன்பினையும், புதல்வன் வழி ஊடல் தீர்க்க முயன்றபோது தலைவி ஏற்காதபோதும் 9. தலைவியின் மாண்புடைய நலத்தினைத்தருக என இடித்தற் கண்ணும் 10. தலைவனது பேணாத ஒழுக்கத்தை எண்ணி நாணிய இடத்தினும் 11. தலைவன் சூள் உரை பிழைத்ததால் ஏற்படும் துன்பத்தை எண்ணித் தலைவி வருந்திய போதும் 12. பெரியோர் ஒழுக்கம் பெரிது எனச் சொல்லித் தலைவனைத் திருத்தும் இடத்தும்

Scanned with CamScanner

13. இணக்கமில்லாத தலைவியின் சார்பாக நின்று அவளது புலவியைத் தீர்க்குமிடத்தும் 14. ஊடல் உற்ற தலைவியைத் தலைவன் சார்பாக நின்று சிறிது சினந்து சரிப்படுத்தும் தகுதிக் கண்ணும் 15. களவுக் காலத்துப் பெருமை காட்டிக் கற்புக் காலத்து எளிமை காட்டி இரங்குமிடத்தும் 16. பாணர், கூத்தர், விறலியர், இவர் கூறிய குறைகளை நீக்கும் போதும் 17. பரத்தையிற் பிரிந்த தலைவனைக் கண்டித்து மறுபடியும் இல்லற வாழ்வில் ஒழுகுமாறு செய்யும் போதும் 18. அவன் பிரியும் காலத்து அதை எதிர்த்து நின்று விலக்கிய தன்மையும் ஆகப் பிறவும் தோழிக்குரிய கூற்றுக்கள் எனக் கூறுவர் அறிவுடையோர். 9

1. தலைவன் பிறரொடும் சேர்தலை அறிந்து புலக்குமிடத்தும் 2. மனைவி முதலியோர், காமக் கிழத்தியரை இகழ்ந்து பேசும்போதும் 3. தலைவனுக்குப் பிறந்த புதல்வர்க்கண்டு மகிழும் போதும் 4. களவொழுக்கம் ஒழுகி மணந்து கொண்ட மனைவி, செய்கின்ற செயல்களால் தம் பொறுமையைக் கடந்து துன்புறும் போதும 5. காதல சோர்வினாலும், இல்லறக் கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதாலும் தலைவியைத் தாய்போல் தழுவி, அன்பாகப்பேசி, வெறுத்தலின்றித் தலைவனுடன் இணைக்கும் போதும் 6. தலைவனின் புதல்வனைத் தழுவி அணிகள் அணிந்து அவனையே வாயிலாகக் கொண்டு, வந்த வாயில்கள் இடத்தும் 7. மனைவியை ஒத்தவள் என்ற கருத்தினால் தன்னை ஒத்த ஏனை மகளிரினும் தான் உரிமையுடையவள் என்று நினைக்கும் கொள்கைக் கண்ணும், 8. தலைவன், காதலருடன் விளையாடும் விளையாட்டின் கண்ணும் இவை போன்றன பிறவும் காமக் கிழத்தியர் கூற்றுக்களாம். 10

Scanned with CamScanner

## பிற வாயிலோர் கூற்று

1098. கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்,
மெல்லியற் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்,
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்,
முகம் புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்
அகம் புகல் மரபின் வாயில்கட்கு உரிய.

## செவிலி கூற்று

1099. கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக்குரிய ஆகும் என்ப.

## அறிவர் கூற்று

1100. சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய.

## இதுவும் அது

1101. இடித்துவரை நிறுத்தலும் அவரதாகும்
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்.

## தலைமகன் ஊடல்

1102. உணர்ப்புவரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும்,
புலத்தலும் ஊடலும் கிழவோற்குரிய.

Scanned with CamScanner

## அந்நிலையில் தோழிகூற்று

1103. புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்
சொலத் தகு கிளவி தோழிக்குரிய.

## இதுவும் அது

1104. பரத்தை மறுத்தல் வேண்டியும், கிழத்தி
மடத்தகு கிழமை உடைமையானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள்.

## தலைமகள் ஊடல்

1105. அவன் குறிப்பு அறிதல் வேண்டியும், கிழ
அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே

## தலைவன் பணிமொழி

1106. காமக்கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங்காலை கிழவோற்கு உரித்தே
வழிபடு கிழமை அவட்கியலான.

## தலைவி அருள்மொழி

1107. அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்

## அலர்

1108. களவும் கற்பும் அலர் வரைவு இன்றே.

Scanned with CamScanner

சிறிது பொழுது நிற்கும் பிணக்கமாகிய புலத்தலும், நீண்ட பொழுது நீடித்துளதாம் பிணக்கமாகிய ஊடலும் தலைவன், தலைவியரிடையே ஏற்படும் போது தோழி கூற்றுக்கள் நிகழும். 16

தலைவன் பரத்தையர் வழிச் செல்லும் போது, தலைவி மடன் என்னும் பண்பால் அடங்கி ஒழுகுதலால், தோழி, அன்பிலை நீ, கொடியை என்று தலைவனிடம் இடித்துரைத்தற்கும் உரியள். 17

தலைவனது குறிப்பை அறிதல் வேண்டியும், தலைவி தனது ஊடலை நீக்கும் நிலையிலும் உறவின்மையைப் புலப்படுத்தும் சொற்களைக் கூறவும் செய்வாள். 18

அன்பு மிக்க காலத்துத் தலைவன் தலைவியிடம் பணிந்து பேசுவான்; தலைவனை வழிபடும் உரிமை தலைவிச்கு இயல்பாக அமைதலான். 19

அருட் பண்பினைத் தோற்றுவிக்கும் அன்பினை உள்ளடக்கிய சொற்களைப் பொருள் தெளிவுபடச் சொல்லுதல் தலைவிக்கும் உரியது. 20

களவுக் காலத்தும், கற்புக் காலத்தும், அவர்தம் அன்பு பிறருக்கு வெளிப்படுதலை நீக்கார். 21

தொ. 29

## அதன் பயன்

1109. அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே.

## இதுவும் அது

1110. கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே.

## அந்நிலையில் வாயிலோர்

1111. மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை
தம் உளவாதல் வாயில்கட்கு இல்லை.

## இதுவும் அது

1112. மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே.

## இதுவும் அது

1113. முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்.

## கூத்தர் கூற்று

1114. தொல்லவை உரைத்தலும், நுகர்ச்சி ஏத்தலும்,
பல்லாற்றானும் ஊடலின் தணித்தலும்
உறுதி காட்டலும், அறிவு மெய் நிறுத்தலும்,
ஏதுவின் உணர்த்தலும், துணிவு காட்டலும்,
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன.

Scanned with CamScanner

அவர் காரணமாகத் தலைவன் தலைவியர் அன்பு பிருதியாகும். 22

தலைவன் விளையாட்டுக் கண்ணும் அன்பு பிருதியாகும். 23

மனைவியின் முன்னால் தலைவனின் புறத்தொழுக்கம் போன்ற கொடுமைச் செய்திகளைக் கூறுதல் வாயில்களுக்கு இல்லை. 24

மனைவியின் முன்னால், செயலற்ற சொற்களைச் சொல்லுதல், மனைவி உள்ள உறுதியுடன் இருந்தால், வாயில்கட்கு உண்டு. 25

முன்னிலையில் உள்ளாரைக் குறித்துப் படர்க்கை போலப் பேசுதல் எல்லா வாயில்களுக்கும் உண்டு. அவரிடம் இரந்து பின்னிற்கும் போது என்று கூறுவர் அறிவுடையோர். 26

1. முன்புள்ளோர் வரலாறுகளை எடுத்துரைத்தலும் 2. மனை வாழ்க்கை நுகர்ச்சியைப் புகழ்தலும் 3. தலைவன், தலைவியர் ஊடலைத் தணித்தலும் 4. வாழ்க்கை உறுதிகளைக் காட்டலும் 5. கேட்போர் அறிவினை மெய்ம்மையில் நிறுத்தலும் 6. காரணகாரியங்களோடு உணர்த்தலும் 7. உறுதிப்படுத்தலும் 8. அழகு நிலை உணர்த்தலும் கூத்தர்க்குரிய கூற்றுக்களாக அமையும். 27

## இதுவும் அது

1115. நிலம்பெயர்ந்து உரைத்தல், அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.

## இளையோர் கூற்று

1116. ஆற்றது பண்பும், கருமத்து விளைவும்,
ஏவல் முடிவும், வினாவும், செப்பும்,
ஆற்றிடைக் கண்டபொருளும், இறைச்சியும்
தோற்றம் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப.

## இதுவும் அது

1117. உழைக்குறும் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு
நடக்கை எல்லாம் அவர்கட் படுமே.

## தலைவன் கலங்கல்

1118. பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்
மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்
இறந்தது நினைஇக் கிழவோன் ஆங்கண்
கலங்கலும் உரியன் என்மனார் புலவர்.

Scanned with CamScanner

தம் இடம் பெயர்ந்து தலைவன் இருக்கும் இடம் சென்று கூறுதலும், அவ்விடத்து அவளது நிலை உரைத்தலும் கூத்தர்க்கும், பாணர்க்கும் பொருந்திய கூற்றுக்கள். 28

1. தலைவன் செல்வதற்குரிய வழியினது தட்பவெப்ப நிலைகளையும் 2. எடுத்துக்கொண்ட தொழிலின் பயனும் 3. முன்னர் ஏவப்பெற்ற வினையின் முடிவும் 4. செய்ய வேண்டியதைக் கேட்டலும் 5. கேட்டகேள்விகளுக்கு விடையும் 6. வழியிடைக் கண்ட பொருள்கள், கருப்பொருள்கள் பற்றியும் 7. தாம் கண்ட செய்திகள் போன்றவையும் இளையோர்க்கு உரியன என்று கூறுவர். 29

பக்கத்தே இருந்து குற்றேவல் செய்தலும், மெய்காத்தலும், உயர்ந்தோர்க்குரிய செயல்களெல்லாம் இளையோர்க்கும் பொருந்தும். 30

பின்பு மக்கட் பேறாகிய பெரும் பொருளைக் கருதிச் செய்த திருமணத்தால், தொன்முறை மனைவியாகிய தலைவி எதிர்ப்பட்ட நிலையிலும், ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்துள்ள புதல்வனைக் கையில் கொண்டு புகும்போதும், பரத்தையர் ஒழுகல் போன்ற கடந்த கால நிகழ்ச்சிகளை நினைத்த தலைவன் உள்ளம் கலங்கலும் உண்டு எனக் கூறுவர் அறிவுடையோர். 31

Scanned with CamScanner

தாயைப் போன்று இடித்துரைத்துப் பின்பு தலைவனைத் தழுவிக் கொண்டு, ஆதரித்தல், ஆயம் சிறப்பினையுடைய தலைவிக்கு உரித்து என்று கூறுவர்; அவன் தன்னை முயங்கி மகிழும் காலத்து. 32

தலைவன் சோர்வைப் போக்கிக் காத்தல், தலைவி கடமை ஆதலால், மகன் உயர்வைத் தாய் கருதுவது போல் கருதிச் செயல்படுவாள் தலைவி; அவன் பணிந்த மொழியினனாக இருத்தல் இயல்பாகும். 33

நினைத்தற்கு அரியவற்றை எண்ணிக் கொண்டிருக்கும் பாசறைக்கண் பெண்டிரோடு போகார். 34

புறத்திணைப் பணிகளுக்குள்ள பெண்டிர் பாசறைக்கண் பொருந்துவர் என்று கூறுவர். 35

காதலரின் வேட்கை நிலை எடுத்துரைத்தலும், தலைவன் தேரின் நிலை கூறுதலும், தலைவனது உள்ளக் குறிப்பினைத் தலைவிக்குக் கூறுதலும், பசு முதலியனவற்றொடு பொருந்திய நன்னிமித்தங்கூறுதலும், பிரிந்து சென்றதைக் கூறுதலும், செலவினைத் தவிர்க்கக் கூறுதலும், இவை போன்றன பிறவும் பார்ப்பார்க்கு உரியன. 36

Scanned with CamScanner

தோழி முதலான வாயிலாக அமைபவர், தலைவன், தலைவி இருவரிடத்தும் பொருந்திய மகிழ்ச்சியே குறிக்கோளாக அமைவர் என்று கூறுவர். 37

அன்பு நீங்கிய கடுஞ்சொற்களை வாயிலோர் கூற நேர்ந்தால், நேர்நின்று கூறப்பெறாது, சிறைப்புறமாகக் கூறும் குறிப்பினதாக அமையும் என்று கூறுவர் அறிவுடையோர். 38

தன்னைப் புகழ்ந்து பேசும் நிலை, தலைவன் முன் தலைவிக்கு இல்லை, முன்பு கூறிய இரண்டு இடங்களைத் தவிர. (987, 1119). 39

தலைவி முன்னர் தலைவன் தன்னைப் புகழ்ந்துரைக்கும் சொல், அவன் வினைவயிற் பிரிந்து செல்லும் போது உண்டு எனக்கூறுவர். 40

தலைவன் கூற்றினை எதிர்மறுத்துக் கூறுதல் பாங்கனுக்கு உரித்தாகும். 41

அவ்வாறு தலைவனை எதிர்த்துப் பாங்கன் பேசுதல் மிகவும் அருமையாகக் குறைந்து தோன்றும். 42

களவுக் காலத்துப் பல துன்பங்களுக்கிடையிலும், ஏனைய பிரிவுக் காலங்களிலும், தலைவியை வற்புறுத்தி அல்லது செல்லுதல் இல்லை. 43

Scanned with CamScanner

வினைமேல் பிரிந்து செல்லும் தலைவன், செல்லுதற்குக் காலம் தாழ்த்துதல், செல்லாமல் இருப்பதன்று; தலைவியை வற்புறுத்தலைக் குறித்துத் தங்கிய தவிர்ச்சியாகும். 44

தலைவன் போர்க் களத்தில் வினையில் ஈடுபட்டிருக்கும் போது தலைவி பற்றிப் பேசமாட்டான்; வெற்றி பெற்ற போது தலைவிபற்றி நினைப்பான். 45

தலைவிக்குப் பூப்புத் தோன்றிய பன்னிரண்டு நாட்களும், அவளைப் பிரிந்து தங்குதல் இல்லை என்று கூறுவர் அறிவுடையோர்; பரத்தையிடம் பிரிந்த காலத்தும் உட்பட. 46

கல்விக்குப் பிரியும் பிரிவு மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடவாது. 47

அரசனுக்காகப் /பகைவயிற் பிரிவு, தூதுப் பிரிவு, போன்றன ஒரு ஆண்டிற்கு உட்படும். 48

பொருள் ஈட்டச் செல்லும் பிரிவும் ஒரு ஆண்டிற்கு உட்பட்டே அமையும். 49

தம் ஊரைவிட்டு நீங்கிச் சென்று, நீர்த் துறைகளிலும், சோலைகளிலும் விளையாடி நுகர்ச்சி பெறுதலும் இருவர்க்கும் உரிய வாழ்க்கைச் செயல்களாம். 50

Scanned with CamScanner

இல்லற வாழ்க்கையின் இறுதிக் காலத்து, பெருமை பொருந்திய மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு தலைவனும், தலைவியும், சிறந்ததாகிய செம்பொருளை இடைவிடாது நினைத்தல் மனையறத்தின் கடந்த காலப் பயனாகும். 51

தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் எனும் இப்பன்னிரண்டு பேரும் தலைவன், தலைவியர் வாழ்க்கையில் தொடர்புடைய வாயில்கள் என்று கூறுவர். 52

தலைவன் தன் வினைமேல் சென்று, திரும்பும் போது, இடைவழியில் தங்கித் தாமதித்தல் இல்லை. தலைவிபால் விரைந்து செல்லும் அவன் உள்ளம் போல் உதவுகின்ற பறவைபோல் பறந்து செல்லும், மனச்செருக்குடைய குதிரையை அவன் கொண்டுள்ளதால். 53

Scanned with CamScanner

# 23. பொருளியல்

(பொது நிலையில் பொருளதிகாரத்தின் ஒழிபியல் என்று கூறுவது மரபு)

## பொருளின் இயைபு

1141. இசை திரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே
அசை திரிந்து இயலா என்மனார் புலவர்.

## தலைவன், தலைவியர்க்குரிய ஒருபால் கூற்று

1142. நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமங் கண்ணிய மரபிடை தெரிய,
எட்டன் பகுதியும் விளங்க, ஒட்டிய
உறுப்புடையது போல், உணர்வுடையது போல்,
மறுத்துரைப்பது போல், நெஞ்சொடு புணர்ந்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்,
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்,
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்து இருவர்க்கும் உரிய பால் கிளவி.

## அதன்கண் கனவு

1143. கனவும் உரித்தால் அவ்விடத் தான.

Scanned with CamScanner

இசை திரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும். அசைச் சொற்கள் திரியாது நின்றே பொருள் தரும் என்று கூறுவர் அறிவுடையோர். 1

துன்பமும், இன்பமும் என்ற இருவகை நிலையில், அன்பு மிகுதியாகப் பொருந்திய மரபு தெரிய, எண் வகைச் சுவைகளும் விளங்க, நெஞ்சமானது, பல உறுப்புக்களைக் கொண்டுள்ளது போல், உணர்வுடையது போல், மறுத்து உரைப்பதுபோல் நெஞ்சத்தொடு பொருந்தி, ஏனைய உயிரினங்களில் சொல்ல இயலாநிலையினவற்றொடு பொருந்தி, செய்ய இயலாதவற்றைச் செய்வது போல் காட்டியும், பிறவற்றின் துன்பத்தைத் தம் துன்பமாகச் சேர்த்தியும், அறிதல் வேறாகவும், ஐம்புலன்கள் வேறாகவும் நிறுத்தி, அஃறிணை இருபாலும், உயர்திணை முப்பாலும், இயைபுபடுத்துமிடத்து உவமத்தின்வழிக் கூறலும், தலைவன், தலைவியர்க்கு உரிய ஒரு பக்கத்துச் சொல்லாகும். 2

அன்பு மிகுதிக்கண், தலைவன், தலைவி, இருவர்க்கும் கனவும் ஏற்படும். 3

Scanned with CamScanner

### அது தாய்க்கும் உரியது

1144. தாய்க்கும் உரித்கால் போக்குடன் கிளப்பின்.

### தோழி முதலியோர்க்குரிய ஒருபால் கூற்று

1145. பால் கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே.

### இதுவும் அது

1146. நட்பின் நடக்கை ஆங்கலங்கடையே.

### அதன்கண் தோழி முதலியோர்க்குரிய பண்புகள்

1147. உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.

### அதன்கண் தலைவி இயல்பு

1148. வண்ணம் பசந்து புலம்புறு காலை
உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையில் புணர்க்கவும் பெறுமே.

### இதுவும் அது

1149. உடம்பும் உயிரும் வாடியக் காலும்
என் உற்றன கொல் இவை எனின் அல்லது
கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை.

Scanned with CamScanner

### இதுவும் அது

1150. ஒரு சிறை நெஞ்சோடு உசாவுங்காலை
உரியதாகலும் உண்டென மொழிப.

### இதுவும் அது

1151. தன்வயின் கரத்தலும் அவன்வயின் வேட்ட
அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்
மடனொடு நிற்றல் கடன்என மொழிப.

### தோழியின் முறைமை

1152. அறத்தொடு நிற்கும் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப.

### அறத்தொடு நிற்றற்குரிய கருத்துக்கள்

1153. எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல்,
கூறுதலுசாஅதல், ஏதீடு, தலைப்பாடு,
உண்மை செப்புங் கிளவியொடு தொகை
அவ் எழுவகைய என்மனார் புலவர்.

### தலைவியின் நிலையால் உற்றது உணர்

1154. உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிழவியின் உண

### பெண்ணின் இயல்புகள்

1155. செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான.

Scanned with CamScanner

## வரைவு கடாதல் - அதன் முறைமை

1156. பொழுதும் ஆறும் காப்பும் என்று இவற்றின்
வழுவினாகிய குற்றங் காட்டலும்,
தன்னை அழிதலும், அவன் ஊறு அஞ்சலும்
இரவினும் பகலினும் நீவா என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப.

## இதுவும் அது

1157. வேட்கை மறுத்துக் கிளந்தாங்கு உரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப.

## தலைவன், (தலைவியர்) ஊர்திகள்

1158. தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.

## பேசுவதோர் வகை

1159. உண்டற்குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே.

## பொருள் வேண்டுதல்

1160. பொருளென மொழிதலும் வரைநிலை இன்றே
காப்புக் கைமிகுதல் உண்மையான.

Scanned with CamScanner

தலைவியை இல்லில் செறித்துக் காக்கும் காவல் மிகுதியான போது, தலைவன் மீதுள்ள அன்பு, அதனால் ஏற்படும் அறம், இன்பம், நாணம், போன்றவை நீங்கிய ஒழுகலாறு பழிப்புக்குரியதன்று. ஆதலால், காவலில் இவைபற்றி மிகுதியாகக் கருத வேண்டாம். 21

காப்பு மிகுதி கருதி, தலைவி உடன் போக்குக்குத் யாரானாலும் காட்டுவழி எனக்கூறி, விலக்குதல் உண்டு. 22

உயர்ந்தோர் கூறும் பொருளுரைகள், உலக வழக்கொடு பொருந்தி அமைதலால், அவற்றை வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குரியதோர் முறைமையாகும். 23

அறத்திற்கு அழிவைத் தருபவை, பொருளும் இன்பமுமாகிய பொருள் பயனைத் தந்தாலும், வழக்கென வழங்கல் பழிக்கப்பட்டது என்பர். 24

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள்களை எடுத்துரைக்கும் போது, உயிர்ப் பண்பாகிய நாணம் நீங்காத நிலையில் நல்வழிப் படுத்தல் வேண்டும். 25

முறைப்பெயரிடத்து அன்பை உணர்த்தும் பொதுச் சொல்லாகிய 'எல்லா' ஆண்பால், பெண்பால் ஆகிய இரு ஈற்றுக்கும் உரியதாகும். 26

Scanned with CamScanner

தாயமுறையால் வந்து அடையா; கொடுத்தலாற் செல்லா; தொழில் முயற்சியால் தங்கா; வேறுபடுத்திக் கொள்ளப்படா; ஆகிய பொருள்களின் உரிமைத் தோற்றம், அகப்பொருள் ஒழுகலாறுகளில் அல்லனவாயினும் பொருந்துவ உள; தலைவியைக் கண்ணே! என்று செவிலி கூறல்போன்று. 27

தலைவன், தலைவி, என்று கூறப்பெறும் ஒருமைப்பால் சொல் உலகத் தலைவன், தலைவியர் அனைவரையும் குறிப்பதால், பன்மையிலும் வருதல் உலகு வழக்கு எனக் கூறுவர். 28

இன்பம் என்பது உலக உயிர்கள் அனைத்திற்கும் பொருந்திவரும் விருப்பமுடைமை ஆகும். 29

பரத்தையர்ப் பிரிதல் நானிலத்தார்க்கும் உரியது; அதற்கு நிலத்திரிபு இல்லை என்று கூறுவர் அறிவுடையோர். 30

மனையறம் நிகழ்த்தும் உரிமை வேண்டினும், பெண்களுக்குத் தலைவன் பிரிவான் என்ற அச்சம் உண்மையானும், களவு வெளிப்படுவதால் ஏற்படும் அம்பலும், அலரும், இவற்றால் ஏற்படும் அச்சமும், தலைவன் வந்தபோது அவனுடன் அளவளாவ இயலாத இடையூறுகளாலும், உடன்போக்கும், ஏன் வரைந்து கொள்ளவில்லை என்ற வினாவும் தலைமகளிடத்துத் தோன்றும். 31

## இரக்க உணர்வு

1172. வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.

## உயர்வு

1173. மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய.

## இதுவும் அது

1174. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்
புகழ்தகை வரையார் கற்பினுள்ளே.

## இறைச்சி

1175. இறைச்சி தானே பொருள் புறத்ததுவே.

## அதன் உட்பொருள்

1176. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே.

## அதனால் வன்புறை

1177. அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.

## நலம் பாராட்டுதலால் அச்சம்

1178. செய்பொருள் அச்சமும் வினைவயின் பிரிவும்
மெய்பெற உணர்த்தும் கிழவி பாராட்டே.

Scanned with CamScanner

பொது நிலையில் வருத்தம் மிகுதியாகும் போது வாழ்க்கையில் இரக்க உணர்வு தோன்றும் என்று கூறுவர்.

32

புலவிக் காலத்து மனைவிக்கு உயர்வும் தலைவனுக்குப் பணிவும் ஏற்படும்.

33

தலைவன் தன் மிகுதியான வேட்கை காரணமாகத் தலைவியைப் புகழ்தலை நீக்கார், நிகழ்கின்ற கற்புக் காலத்து.

34

இறைச்சி என்னும் குறிப்புப் பொருள், வெளிப்படக் கூறப்பட்ட கருப்பொருளின் புறத்தாகத் தோன்றும்.

35

கருப்பொருளின் புறத்துப் பிறக்கும் இறைச்சியில் தனிப்பட்ட குறிப்புப் பொருள் தோன்றும்; அதைத் தெரியும் திறனுடையோர்க்கு அது புலனாகும். 36

இறைச்சிப் பொருள் அன்பு மிகுதியாதற்கும் பொறுமையை வற்புறுத்தலுக்குமாக அமையும் தலைவி வருந்தும் காலத்து.

37

தலைவன் தலைவியைப் பாராட்டுதலால், அவன் பிரிவான் என்ற அச்சம் தலைவிக்கும் தோன்றும் செய்பொருள் அச்சமும் தோன்றும்.

38

Scanned with CamScanner

### உள்ளத்து ஊடல்

1179. கற்பு வழிப்பட்டவள் பரத்தை ஏத்தினும்
உள்ளத் தூடல் உண்டுஎன மொழிப.

### தலைவனது குறிப்புணர்தல்

1180. கிழவோள், பிறள்குணம் இவைஎனக்கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.

### தலைவனைக் கடிந்துரைத்தல் இல்லை

1181. தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மையாக அவர்வயின் உணர்ந்தும்
தலைத்தாள் கழறு அறம் எதிர்ப்பொழுது இன்றே
மலிதலும் ஊடலும் அவை அலங்கடையே.

### தலைவியின் மருட்கை

1182. பொழுது தலைவைத்த கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே, வருத்தம், மருட்கை, மிகுதியோடு
அவை நாற்பொருட்கண் நிகழும் என்ப.

### தோழி கூறும் படைத்து மொழிச்சொற்கள்

1183. இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும், பொய்தலைப் பெய்தலும்
நல்வகையுடைய நயத்திற் கூறியும்
பல்வகையானும் படைக்கவும் பெறுமே.

Scanned with CamScanner

கற்ப வழிப்பட்ட தலைவி, பரத்தையைப் புகழ்ந்து பேசினாலும், தன் உள்ளத்தில் ஊடல் குறிப்பு உண்டு என்று கூறுவர். 39

தலைவி, தலைவனுடன் தொடர்புடைய பிறள் குணம் இவை என்று கூறி, அவன் மறுமொழியால், அவன் உள்ளக் குறிப்பினை உணர்வாள். 40

பரத்தையர், தம் துன்பத்தைத் தலைவியிடம் வந்து கூறினாலும், அதைத்தான் உண்மையாக உணர்ந்தாலும், அவனுடன் மகிழ்வாக இருக்கும் போதும், ஊடும்போதும் அன்றி, எதிர்ப்பட்டபோது இடித்துரைத்தல் இல்லை. 41

தலைவன், வினைவயிற் பிரிந்து, குறித்த காலத்தில் வராதபோது, செயலற்ற நிலையில், தலைவி, காலங்கடந்துவிட்டது போலச் சொல்லும் சொற்கள், மடன், வருத்தம், மருட்கை, அன்பு மிகுதியோடு நிகழும் என்று கூறுவர். 42

தோழி, தன்பால் இரந்து குறையுற்ற தலைவனிடம், அவனை அகன்று நீக்கி நிறுத்தும் நிலையிலும், உண்மை கூறலும், பொய்ம்மையைக் கலந்து கூறலும், நயமான சொற்களைக் கூறுதலும், இவ்வாறு பல்வகையாகப் படைத்துச் சொல்லும் திறனுடையள். 43

Scanned with CamScanner

## எதிர் உரை

1184. உயர்மொழிக் குரிய உறழுங்கிளவி
ஐயக்கிளவி ஆடூஉவிற் குரித்தே.

## அறிவுரை

1185. உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரியதாகும் தோழிகண் உரனே.

## புகழுரை

1186. உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.

## தோழி முதலிய வாயிலோர் உரைகள்

1187. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின்று உரிய தத்தம் கூற்றே.

## உள்ளுறை மொழியின் வகை

1188. உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு எனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே.

## அதன் மற்றோரியல்பு

1189. அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.

## அதன்கண் அடங்குவன

1190. மங்கல மொழியும், வைஇய மொழியும்,
மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்,
கூறியல் மருங்கின் கொள்ளும் என்ப.

Scanned with CamScanner

உயர்த்திக் கூறும்நிலை, தலைவன், தலைவி இருவருக்கும் உண்டு. ஐயுற்றுக் கூறுதற்குரிய சொல், தலைமகனுக்கு உரியது. 44

வருகின்ற இடையூறுகளைப் பாதுகாத்தல் தனது கடமையாதலால், தோழிக்கு மனவலிமை உரியதாகும். 45

தலைவன், தலைவியரை உயர்த்திக் கூறும் நிலையும் தோழிக்கு உரியது. 46

தோழி போன்ற வாயில்கள் கூறும் வெளிப்படைச் சொற்கள், பழுதின்றி அமைதலுக்கு உரியன. 47

உடன் உறைதல், உவமம், சுட்டு, நகை, சிறப்பு, என்று கூறப்பெறும் கேடில்லாத மரபினையுடைய உள்ளுறை ஐந்து வகைப்படும். 48

முடிவில்லாத சிறப்பினையுடைய அகத்திணை ஒழுகலாற்றிலுள்ள இன்பம், இத்தகைய உள்ளுறைகளில் தோன்றி வருதல், முன்னோர் வகுத்துரைத்த பண்புடைச் செயலாகும். 49

தலைவனை வாழ்த்திப் பேசும் மங்கல மொழியும், திட்டிய மொழியும், மாறுஇல்லாத ஆளுந்தன்மையில் சொல்லிய மொழியும், உள்ளுறையின் கூறாக அடங்கும் என்று கூறுவர். 50

Scanned with CamScanner

### தோழி சிறப்பித்துக் கூறுதல்

1191. சினனே, பேதைமை, நிம்பிரி, நல்குரவு,
அனைநால் வகையும் சிறப்பொடு வருமே.

### அன்னை, என்னை என்றல்

1192. அன்னை என்னை என்றலும் உளவே
தொன்நெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர்.

### நுண்பொருள்கள்

1193. ஒப்பும், உருவும், வெறுப்பும் என்றா,
கற்பும், ஏரும், எழிலும் என்றா,
சாயலும், நாணும், மடனும் என்றா,
நோயும், வேட்கையும், நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டலாகாப் பொருள என்ப.

### அவை எஞ்ஞான்றும் உள்ளன

1194. இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மையான.

சினம், பேதைமை, பொறாமை, வறுமை நான்கும் வேண்டத்தகாத பண்புகள், ஆனால் அவை சிறப்பாகக் கருதியும் உரைக்கப் பெறும். 51

அன்னை, என்னை, போன்ற சொற்கள் அகத்திணை ஒழுகலாற்றில் வழங்கும் சொற்கள்; இவை வழிவழியாகத் தொன்னெறி மரபால் வரும் சொற்கள். இவற்றிற்குச் சொல், எழுத்துக்களால் பொருள் தோன்றாத மரபின என்று கூறுவர் அறிவுடையோர். 52

ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, பொலிவு, அழகு, சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்தல், போன்ற சொற்களின் பொருள்களை நெஞ்சால் உணர முடியும்; பருப்பொருள்கள் போன்று காட்டமுடியாது. அவை நுண்பொருள்கள் என்று கூறுவர். 53

வானோர் தேயத்தும், அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட உலகத்தும் மேற்கூறியவை அனைத்தும் அவை இல்லாத காலம் இல்லாமையால், உள்பொருள்களேயாம். 54

தொ.3|.